# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:18 **தேதி**:-31.08.2017

**ஊழியர்களுக்கும் இரவுநேர இலவச அழைப்பு**
**BSNL ஊழியர் சங்கத்தின் மற்றும் ஒரு சாதனை மற்றும் இதர செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

சந்தாதாரர்களுக்கு இரவு நேர இலவச அழைப்பு வசதியை நிர்வாகம் வழங்கிய போது, BSNL ஊழியர் சங்கம் மட்டுமே அதனை பணியில் உள்ள ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என கோரிக்கை வைதத்து. இது தொடர்பாக CMD BSNL அவர்களிடம் பலமுறை விவாதித்ததுடன் பல கடிதங்களையும் நமது சங்கம் கொடுத்திருந்தது. எனினும் நிர்வாகம் முதலில் ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த சலுகையை வழங்கியது. மீண்டும் BSNL ஊழியர் சங்கம், பணியில் உள்ள ஊழியர்களுக்கும் இந்த வசதியை விஸ்தரிக்க வேண்டும் என கோரிக்கையை வைத்து நிர்வாகத்தின் பலமட்டங்களில் விவாதம் நடத்தியது. இந்த பிரச்சனையை 35வது தேசிய கவுன்சில் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. நமது தொடர் முயற்சியின் காரணமாக நிர்வாகம் 30.08.2017 அன்று பணியில் உள்ள ஊழியர்களுக்கும் இரவு நேர இலவச அழைப்பு வசதியை நீட்டித்து உத்தரவிட்டுள்ளது. அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

**SC/ST நலன்களை பாதுகாப்பது BSNL ஊழியர் சங்கமே:-** பதவி உயர்வுகளில் SC/ST ஊழியர்களுக்கு DOP&T உத்தரவை முழுமையாக அமலாக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்துள்ளது. நமது சங்கத்தின் வற்புறுத்தல் காரணமாக 29.12.2004 மற்றும் 28.07.2016 ஆகிய தேதிகளில் SC/ST ஊழியர்களுக்கான தகுதிகாண் மதிப்பெண்களை குறைத்து உத்தரவிட்டது. எனினும் நமது சங்கம் DOP&T உத்தரவை முழுமையாக அமலாக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்ததோடு 35வது தேசிய கவுன்சில் கூட்டத்திலும், DOP&T உத்தரவுக்கு இணையான 30.11.1992 தேதியிட்ட DOT உத்தரவு எண். 22-5/91-NCGயாவாது அமலாக்க வேண்டும் என கேட்டுக் கொண்டது. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் கொடுத்த DOTயின் கடிதத்தை படித்த தேசிய கவுன்சிலின் தலைவர் இந்த உத்தரவை அமலாக்க பரிசீலிக்கும் படி நிர்வாக தரப்பிற்கு உத்தரவிட்டார். தேசிய கவுன்சில் கூட்டம் முடிந்த பின் நமது மத்திய சங்கம் இரண்டு முறை நினைவூட்டும் கடிதங்களை எழுதியது. 26.08.2017 அன்று நமது மத்திய சங்கம் நேரடியாக சென்றும் வற்புறுத்தியது. அதன் அடிப்படையில், 28.08.2017 அன்று நிர்வாகம் ஒரு உத்தரவை வெளியிட்டுள்ளது. அதில் நமது பொது செயலாளர் கொடுத்த கடிதத்தில் உள்ளபடி SC ஊழியர்களுக்கு குறைந்த பட்ச மதிப்பெண் 20 எனவும், ST ஊழியர்களுக்கான குறைந்த பட்ச மதிப்பெண் 15 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு 28.07.2016 முதல் அமல் படுத்தப்படும்.

**JE LDCE தேர்வுகளை உடனடியாக நடத்த BSNLEU வலியுறுத்தல்:-** அனைத்து இலாகா தேர்வுகளும் முடிவடைந்த நிலையில் இன்னமும் JE LDCE தேர்வுகளுக்கான அறிவிப்பு மட்டும் கொடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி அதற்கான பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என நமது மத்திய சங்கம் 26.08.2017 அன்று GM(Rectt) அவர்களை சந்தித்து கேட்டுக் கொண்டது. பல மாநிலங்களில் இருந்து கார்ப்பரேட் அலுவலகம் கோரிய விவரங்கள் வராததை தெரிவித்த அவர், 31.08.2017க்குள் விவரங்களை மாநில அலுவலகங்கள் அனுப்பவில்லை எனினும், தாங்கள் ஒரு முடிவு எடுத்து விடுவோம் என தெரிவித்துள்ளார்.

**SNEA பொதுசெயலாளருக்கு குற்றப்பத்திரிக்கை கொடுக்கப்பட்டது BSNL CMDக்கு தெரியாதாம்!:-** SNEA இணைய தள செய்திகளின் படி SNEA பொது செயலாளர் தோழர் K.செபாஸ்டியனுக்கு குற்றப்பத்திரிக்கை வழங்கப்பட்ட விஷயமே CMD BSNLக்கு தெரியாதாம். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் சங்கத்தின் பொது செயலாளருக்கு நிறுவனத்தின் தலைமை அதிகாரிக்கே தெரியாமல் குற்றப்பத்திரிக்கை வழங்கப்படுகிறது என்றால் கார்ப்பரேட் அலுவலகத்தில் நிலவும் அராஜகத்தை என்னவென்று சொல்ல?

**BSNL ஊழியர் சங்கத்தோடு கார்ப்பரேட் அலுவலகம் சந்திப்பு:-** கார்ப்பரேட் அலுவலகத்தின் HR பிரிவிலிருந்து தொழிற்சங்க உரிமைகளை பறிக்கும் உத்தரவுகள் தொடர்ந்து வெளியிட்டதின் காரணமாக நிர்வாகத்திற்கு கொடுத்து வந்த ஒத்துழைப்பை விலக்கிக் கொள்வதாக நமது சங்கங்கள் தெரிவித்திருந்தது. தற்போது நமது சங்கத்துடன் DIRECTOR(HR) விவாதிக்க செப்டம்பர் முதல் வாரத்தில் ஒரு தேதியை நிர்ணயிக்குமாறு நமது சங்கத்திற்கு HR பிரிவிலிருந்து ஒரு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 29.08.2017 அன்று சாத்தியமான தேதிகளை நமது பொது செயலாளர் GM(SR) அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்**